செ.வெ.எண்: 244 நாள்: 08.05.2024

**புதுக்கோட்டை மாவட்டம்**

**பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு கல்லூரிக்கனவு நிகழ்ச்சி**

**வருகிற 13.05.2024 அன்று நடைபெற உள்ளது –**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை சார்பில், கல்லூரிக்கனவு நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.05.2024) நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ், பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு கல்லூரிக்கனவு நிகழ்ச்சி வருகிற 13.05.2024 திங்கட்கிழமையன்று புதுக்கோட்டை சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற உள்ளது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்லூரிக் கனவு என்ற நிகழ்ச்சியின் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்றையதினம் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;**

தமிழக அரசு மாணவ, மாணவிகளின் நலனுக்காக பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கடந்த ஆண்டு உயர்வுக்கு படி என்ற நிகழ்வாக நடத்தப்பட்டது. இந்த ஆண்டு கல்லூரிக்கனவு என்ற நிகழ்ச்சியாக நடத்தப்பட உள்ளது. குறிப்பாக கடந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற மாணவர்களில் பல்வேறு காரணங்களால் உயர்கல்வி படிக்க இயலாத மாணவர்களை கருத்தில் கொண்டு, அவர்களின் மீது சிறப்புகவனம் செலுத்தி இந்த ஆண்டு கல்லூரிக்கனவு நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

மேலும் வருகிற 13 –ஆம் தேதி நடைபெறும் கல்லூரிக்கனவு நிகழ்வில் கோட்டைப்பட்டினம், மலைக்குடிப்பட்டி, நல்லூர் ஆகிய அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பிளஸ் 2 –வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் பங்கேற்க செய்ய வேண்டும். மற்ற அரசுப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட அளவிலான மாணவர்களை கலந்துகொள்ள செய்ய வேண்டும். மேலும் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களும் உயர்கல்வி பயில்வதை உறுதி செய்ய வேண்டும்.

எனவே தொடர்புடைய துறை அலுவலர்கள் கல்லூரி கனவு நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்திட ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.ஆர்.ரம்யாதேவி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முருகேசன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai

PRO PDKT

@PRO_Pudukkottai

Pro.Pudukkottai